DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 21/2021 |
| Session | ... | |
| | | Prosecution / PW-7 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.விமல் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.ஜெயராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1 to A4 are present).

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 06.03.2023

---

**<u>முதல் விசாரணை</u>**

1. தான் தற்போது தேனி மாவட்டம் ராஜதானி ஆரம்ப சுகாதார நிலையத்தில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.09.2019 ம் தேதி இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்தபோது மாலை 05.45 மணியளவில்

அவசர தீவிர சிகிச்சை பிரிவிற்கு அ.சா1 அசோகன் எனபவர் ஆர்.எஸ்.மங்கலம் மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக என்னிடம் வந்தார்.

2. அ.சா.1 சிகிச்கையின்போது வீட்டு பக்கத்தில் உள்ள தெரிந்த மூன்று நபர்களால் தடியால் தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்ததில் தலையின் வலது பக்கத்தில் காயம் இருந்தது. மேற்படி காயத்திற்கு ஆர்.எஸ்.மங்கலம் மருத்துவமைனயில் தையல்போட்டு அனுப்பி இருந்தார்கள்.

3. அ.சா.1 ஐ உள்நோயாளியாக சேர்த்து இராமநாதபுரம் அரசு மருத்தவமனையில் தலைக்கு சி.டி.ஸ்கேன் பரிந்துரை செய்தேன். மேற்படி சி.டி.ஸ்கேன் நார்மலாக இருந்த காரணத்தால் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்பதாக கண்டு காயச்சான்று வழங்கினேன். **(அந்த காயச்சான்று அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1. அ.சா.1 ற்கு சிகிச்சையளித்த சிகிச்சை பதிவேட்டை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். ஆர்.எஸ்.மங்கலம் மருத்துவ மனையில் இருந்து refer செய்து அனுப்பப்பட்ட குறிப்பாணையை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்

2. காயம்பட்ட நபருக்கு முழுமையாக நான் சிகிச்சையளிக்கவில்லை என்றால் அ.சா.1 ற்கு தலையில் காயம் ஏற்பட்டு இருந்ததால் அறுவை சிகிச்சை மருத்துவரிடம் அனுப்பி வைத்தேன்.

3. வீட்டில் இருந்து வேகமாக ஓடிவந்து நிலையில் இடித்தால் இதுபோன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் அ.சா.1 ற்கு முதலில் ஆர்.எஸ்.மங்கலம் மருத்துவமனை மருத்துவரும், நானும், எனக்கு பின்னர் அறுவை சிசிச்சை மருத்துவரும் சிசிச்சை அளித்தோம் என்று சொன்னேன் என்றால் சரிதான்.